www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்


பங்குனி 2001 இதழ் 24

"அகிம்சையா உரிமைகள கேட்டப்ப ஆயுதத்தால துன்புறுத்தினாங்க. வேறவழியில்லாம ஆயுதத்த தூக்கினா வன்முறை வேணாம் என்கிறாங்க. சரி திரும்ப சமாதான வழியில போய்ப்பார்ப்பமே என்டா அதற்கும் இடந்தராம ஆளாளுக்கு மிரட்டுறாங்க…"

-சனத்தின் குரல்-

## முறியடிப்போம் ஆதிக்கக் கூட்டினை

# முன்னேறுவோம் உறுதியுடன்



**அ**ண்மைக்கால அரசியல் நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானிக்கும் எவருக்கும், சிறிலங்கா அரசும் அதன் எஜமானர்களும், போர்த்தயாரிப்புகளை கூட்டாகச் செய்து கொண்டே, அரசியல் பேச்சுக்கள் என்ற பொறிக்குள் நம்மை வலிந்து இழுக்க முனைவதை அவதானிக்க முடியும். இது மிகவும் நுட்பமாக தயாரிக்கப்பட்டு படிப்படியாக ஒரே சமயத்தில் பல முனைகளில் இருந்து நம் தேசத்தின் மீது விரிக்கப்பட்டு வரும் **கூட்டுச்சதிவலையாகும்**. வெளிப்பார்வைக்கு இக்கூட்டினுள் முரண்பாடுகள் உள்ளது போன்று காணப்பட்டாலும் உண்மையில் அது ஒரு மாயைத் தோற்றம் தான்.

சிங்கள அரசின் இந்த யுத்த முன்னெடுப்புக்கும் அரசியல் ஏமாற்றுத் தனங்களுக்கும் பின்னணியில் நின்று ஆதரவு வழங்கிவரும் அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா உட்பட சிங்கள அரசின் நட்பு-சக்திகளாயிருக்கும் ஆதிக்க சக்திகள் அனைத்தும் நமது விடுதலைப் போராட்டத்தை சிதைப்பதற்கு சிங்கள அரசுடன் நெருக்கமாகக் கூட்டிணைந்து விட்டன என்பது சந்தேகத்திற்கிடமின்றி உறுதியாகி விட்டது.


தேசிய அடக்குமுறைகளையும் இன அழிப்பையும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விடயமாகக் குறுக்கி, அவ்வப்போது அறிக்கைகள் விட்டுக்கொண்டும், உள்நாட்டுப் பிரச்சனை எனவே அதில் தாம் தலையிடப்போவதில்லை என இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அரசுகளும் ஏன் ரஷ்ய ா, சீனா போன்றவையும் தெரிவித்துக் கொண்டு, சமகாலத்தில் சிறிலங்கா அரசின் யுத்தச் செயற்பாடுகளுக்கு எல்லா விதத்திலும் பங்களிப்புகளை வெளிப்படையாகவே செய்கின்றன.

ஆனையிறவில் சிறிலங்காப் படையினரின் முதுகெலும்பு உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இவ்வரசுகள் நேரடியாக தலையிட்டன. நிபந்தனைகள் இட்டன. பகிரங்கமாகவே நமது விடுதலைப் போராட்டதையும் அதன் அடிப்படை அம்சமான, **தேச அரசமைக்கும் அரசியல் இலக்கினையும்** தடைசெய்திருந்தன. உடனடியாகவே, விடுதலைப்புலிகளை தடைசெய்வதா இல்லையா என்ற விடயத்தை விவாதப்பொருளாக்கி **தமிழீழக் குடியரசுக்குத் தடை** என்ற ஆதாரப் பிரச்சனையிருலிருந்து நம் அனைவரது கவனத்தையும் திருப்ப முயன்றன.

இந்திய அரசானது முந்திய காலத்தில் இருந்தே திட்டவட்டமான தனது

(தொடர்ச்சி 6 ஆம்பக்கம்)

## நம் தேசமெங்கும் விடுதலைப் பேரிகை முழங்கட்டும் !



**மு**ன்னெப்போதுமில்லாத அளவிற்கு சர்வதேச சமூகங்களின் ஆதரவை வென்று கொள்ள வேண்டியுள்ள தேவையை நமது தேசம் எதிர்கொண்டு நிற்கிறது. இந்தக் கட்டத்தில் அரசியல்ரீதியாக நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் நமது தேசத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் காரணியாயுள்ளது. இதுவரை கால விடுதலைப் போராட்டத்தினதும் அர்ப்பணிப்புகளினதும் பெறுதிக்கு வலுச் சேர்ப்பனவாக இது அமையப்போகின்றது. இந்தப்பணிகளில் நமது தேசத்தின் அனைத்துப்பிரிவினரும் கூட்டாகவும் தனியாகவும், சமூக சக்திகளாகவும் வர்க்கங்களாகவும், குழுமங்களாகவும் நபர்களாகவும் நிறுவனங்களாகவும் முன்கையெடுக்க வேண்டியுள்ளோம். ஒரு தரப்பு மற்றதை பலப்படுத்த வேண்டியவர்களாய் உள்ளோம். இன்று அவசியப்படுவது நம் தேசத்தின் கூட்டுப்பலமாகும். இதுவொன்றே எதிரிகளின் அனைத்து முயற்சிகளையும் முறியடிக்க நமக்கிருக்கும் சக்தியும் பலமுமாகும்.

போராட்டம் போரியல்ரீதியாக தீவிரமுற்றிருந்த காலங்களில், அது சார்ந்து நமது மக்கள் தமது பங்களிப்பை, ஒத்துழைப்பை, கரிசனையை வழங்கி போராட்டத்தைத் தாங்கி நின்றனர். ஒவ்வொரு போர் நடவடிக்கைக்கும் பின்னால் நமது மக்களின் பௌதீக பங்களிப்பு, உடலுழைப்பு, ஆன்மீக உற்சாகப்படுத்தல் யாவும் பொதிந்துள்ளன. அதற்குமப்பால் மக்கள் தாமே மக்கள்படைகளாக அணிதிரண்டு போர்க்களம் செல்வது அண்மைக்காலத்தில் நமது போராட்டத்தில் உருவாகியிருக்கும் புதிய முன்னேற்றமாகும். இப்படியாக நமது விடுதலைப் போராட்டத்தின் போரியல் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும், அரசியல் நடவடிக்கையின் ஒவ்வொரு நகர்வையும் மக்கள் தாமே ஆதாரமாயிருந்து பலப்படுத்தி வருகின்றனர்.

தற்பொழுது போராட்டம் அரசியல் தளத்திற்கு நகர்ந்துள்ளது. **பொங்கு தமிழின் இரண்டாம் கட்டம்** வெற்றிகரமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. முதலில் அதனை வாழ்த்தி வரவேற்று நமது பங்களிப்பினைத் தரத்தயாராவோம். இதுபோன்ற பல போராட்டங்கள் பலவித பண்புகளில் தமிழீழமெங்கும் வெடித்துக்கிளம்பட்டும். இதில் தொடர்ச்சிகளையும் புதிய புதிய உத்திகளையும் பேணுவோம். ஒன்றிலிருந்து கற்றுக்கொண்டு மற்றொரு முன்னேறிய

(தொடர்ச்சி 7 ஆம்பக்கம்)

## சிங்கள படைகளால் தமிழக பிரஜைகள் படுகொலை!

**சி**ங்கள படைகளினால் தமிழக மீனவர்கள் கடலில் தாக்கப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. தமிழக அரசும், குறிப்பாக இந்திய மத்திய அரசும் இது ஒரு விவகாரமே அல்ல என்பது போல் பாராமுகமாய் இருந்து வருகின்றன.

தமிழக மீனவர்கள் தொழிலுக்காக தமது எல்லையை கடந்து செல்கிறார்களா? அப்படியாயின் இந்திய கடல்எல்லை பாதுகாப்பு படை என்ன செய்து கொண்டிருக்கிறது? தமிழீழத்திலிருந்து அகதிகளாக தமிழகத்திற்கு தஞ்சமென வரும் பொது மக்களைதுரத்திப்பிடித்து விசாரணைக்கு அழைத்துச் செல்வதில் காட்டிவரும் தீவிரத்தை, தமது சொந்த மீனவ மக்களின் உயிரைப் பாதுகாக்கும் விடயத்தில் ஏன் வெளிப்படுத்தாது இருக்கிறார்கள்? தமிழீழ அகதிகளை பிடித்து பயங்கரவாதிகளாக குற்றஞ்சாட்டினால் பதவியுயர்வுகளும் பரிசுகளும் கிடைக்கும். மீனவர்களைப் பாதுகாப்பதால் என்ன நன்மை கிடைக்கப் போகிறது என்பதனாலா?

ஈழத்தமிழரின் போராட்டத்தை நசுக்குவதற்கு சிங்கள அரசுடன் இரகசியமாகவும், வெளிப்படையாகவும் தொடர்ச்சியாக உறவு கொண்டாடும் இந்திய அரசு தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்துவதற்கு சிங்கள அரசுடன் இணைந்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

தாக்கப்படுபவர்கள் தமிழக மீனவர்கள், தமிழ் குடிமக்கள். இந்திய அரச தமது சொந்த பலத்தில் தமிழர்களது நலனில் ஏன் அக்கறைகொள்ளப் போகிறது? ஆகையால் தமது உயிர்பாதுகாப்புக்காக, உரிமைக்காக தமிழர்கள்தான் போராடியாக வேண்டும்.

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரந்து நிற்காது எதிர்கொண்டு வெல்வோம்!

இன்றைய உலக ஒழுங்கில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் அனைத்தும் சாராம்சத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களே. ஏகாதிபத்திய அரசுகள் ஏனைய தேசங்களின் மீது - அத்தேசங்களுக்கு அரசு இருக்கின்றதோ அல்லது அரசமைக்கப் போராடிக் கொண்டிருக்கின்றதோ எதுவாயினும் - அரசியல் பொருளாதார ஆதிக்கத்தினை வலுப்படுத்திக் கொள்வதில்தான் தமது இருப்பினைக் கொண்டுள்ளன. ஏகாதிபத்திய வரிசையில் இந்திய அரசு போன்ற பிராந்திய ஆதிக்க அரசுகளும் இப்போது அணிசேர்ந்துள்ளமை இன்னுமொரு புதிய திருப்பமாகும்.

ஏனைய தேசங்களின் மூல வளங்களைக் கொள்ளையிடவும், அத்தேசங்களை தமது உற்பத்திகளுக்கும் சேவைகள் துறைகளுக்கும் சந்தைக் களமாக்கிக் கொள்ளவும் ஏற்புடையதாக, கொள்கை வகுப்புகளை இந்த வல்லரசுகள் தமக்குள் முற்கூட்டியே செய்து கொள்கின்றன. இந்த ஆதிக்க இலக்குகளுக்கு இசைந்து வராத தேசங்களையும் அவற்றின் அரசுகளையும் அடிபணியச் செய்வதற்காக அந்தந்த தேசத்து ஆளுங்குழுமங்களை தம் வசப்படுத்திக் கொள்கின்றன. அல்லது தமக்கேற்புடையதாக ஆட்சி மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. முடியாத போது கூட்டுத் தண்டனைகளை விதிக்கின்றன. அதுவும் முடியாதபோது நேரடி ஆக்கிமிப்பில் ஈடுபடுகின்றன. இவ்வாறாக, வல்லரசுப் பயங்கரவாதமானது உலக மக்களை தன் பிடிக்குள் தொடர்ந்து அடக்கி வைத்திருக்க முனைகின்றது.

ஏனைய தேசங்களையும் நாடுகளையும் தனது பொருளாதார நலன்களுக்குக் கீழ்ப்படுத்தும் ஒரு வழிமுறையாக வல்லரசுகள் திறந்த பொருளாதாரக் கொள்கையை உலகெங்கும் திறந்துவிட்டுள்ளன. நவகொலனித்துவ சுரண்டல் பொருளாதார அமைப்பின் உருமாற்றப்பட்ட ஒரு தேர்ந்த ஏமாற்று வடிவமே திறந்த பொருளாதாரமாகும். இதர தேசங்களை சட்டபூர்வ ஒப்பந்தங்கள் மூலமாக கொள்ளையிடுவதற்கான ஒரு வழிமுறையாக இது பயன்படுத்தப்படுகின்றது.

இத் திறந்த பொருளாதாரக் கட்டமைப்பானது அனேகமான நாடுகளில் மக்கள் மத்தியில் அகமோதல்கள் குரூரமான பண்புகளில் வெடித்தெழக் காரணமாக அமைகின்றது. இவ்வாறான சமூக, அரசியல் கொந்தளிப்புகளுக்கும் அழிவுகளுக்கும் தாமே மூலக்காரணியாகத் திகழும் இந்த வல்லரசுகள், மறுபுறம் அநீதிகளை எதிர்க்கவும், புதிய புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தவும் விளையும் சக்திகளின் போராட்டங்களைப் பயங்கரவாதம் என்பதாக முத்திரை குத்துகின்றன. தடைகளை பிறப்பித்து அழித்தொழிப்புகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் இறங்குகின்றன.

திறந்த பொருளாதாரத்தின் தவிர்க்க முடியாத விளைவாக மோசமான சமூகக் கொந்தளிப்புகள் வெடிக்கும் என்பதை ஏற்கனவே இந்த ஆதிக்க சக்திகள் அறிந்து வைத்திருக்கின்றன. இதனால் இவ் அரசுகள், தம்பிடிக்குள் உள்ள நாடுகளில் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்வதற்கு முன்பே, அத்தளங்களில் அடக்குமுறைப் பண்பு கொண்ட அரசியல் அமைப்பு முறைகள் மற்றும் சட்டவாக்கங்களை உருவாக்கிக் கொள்ள ஏது செய்கின்றன. ஜனநாயக முறைமைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் அனைத்து ஏற்பாடுகளையும் கச்சிதமாகப் பூர்த்தி செய்து விடுகின்றன. தமக்கு ஏற்புடைய விசுவாசிகளை ஆட்சிக்கட்டில் அமர்த்தி ஏற்கனவே தமக்குள் வகுக்கப்பட்ட கொள்கைகளின் பிரகாரம் காரியங்கள் நடைபெறுகின்றதை உறுதி செய்து கொள்கின்றன.

இங்கு நாம் எடுத்துக் கொள்ளும் விடயம், தமிழ் தேசியவாதம் எழுபதுகளில் தீவிர மடைந்து ஒரு பலமான இயக்கமாக மாறியதில் சிங்கள சோவினிசக் கொள்கைக்குப் புறம்பாக, இந்த திறந்த பொருளாதாரக் கொள்கையின் பங்கை எடுத்துக்காட்டுவதாகும். இந்தப் பின்புலத்தில் ஈழத்தமிழர் தமக்கென ஒரு சொந்த அரசியல், பொருளாதார முறைமைகளை தாபித்துக்கொள்ள மிகவும் தீவிரமாக விளைய வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவதாகும். இதே திறந்த பொருளாதார கொள்கைகளினால் பிறப்பிக்கப்பட்ட அகமுரண்பாடுகளுக்குள் தற்போது இந்திய அரசியல் பொருளாதார கட்டுமாணங்கள் சிக்கிக் கொள்ள தொடங்குகின்றது என்பதைக் காட்டுவதற்காகும். இந்த நெருக்கடிகளை உருவாக்கிய ஏகாதிபத்திய அரசுகளும் இந்திய ஆளுங்குழுமமும் **இந்தியா என்ற அன்றைய கற்பிதமான இருப்பு** இன்று தகர்ந்து போவதற்கான வித்துக்களை தாமே நட்டுள்ளதை மறைத்து விடுவதை



வெளிப்படுத்த வேண்டியுள்ளது. உள்நாட்டு நலன், பிராந்திய நலன் எனக் கூறிக்கொண்டு கொந்தளிப்புகளுக்கான பலியினை தமிழீழ விடுதலைப் போராட்டதின் மீது மிக இலகுவாக சுமத்திவிட முயல்வதை சுட்டுவதற்காகவும்தான்.

இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கையானது இந்திய அரச கட்டமைப்பிற்குள் பலவந்தமாக இணைத்து வைக்கப்பட்டிருக்கும் தேசங்களின் வாழ்வை மேலும் மோசமடையச் செய்யப் போவதால் இத்தேசங்கள் தமது விடுதலைப் பாதையில் மிகவும் தீவிரமாக முன்னேறுவது தவிர்க்க முடியாததாகப் போகின்றது. இந்திய பிராந்தியம் எங்கும் வெடித்தெழப்போகும் அரசியல் கொந்தளிப்பினை தடுத்து நிறுத்துவதற்கு ஒரே வழி, அங்குள்ள தேசங்களின் மத்தியில் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் விதமான அரசியல் கட்டுமாணங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதாகும். மக்களின் அடிப்படைய வாழ்வினையும் வளத்தையும் உறுதிப்படுத்தும் தேசிய பொருளாதார முறைமையை கட்டியெழுப்புவதாகும்.

இது இரண்டுமே ஏகாதிபத்திய ஆதிக்க நலன்களுக்கும் இந்திய ஆளுங்குழுமம் மற்றும் அவர்களின் உள்ளூர் மாநிலக் கூட்டாளிகளின் கொள்ளைக்காரத் தனங்களுக்கும் படாடோபங்களுக்கும் நேர் எதிரானதாகும். இதனால் இந்திய ஆளுங்குழுமம் உண்மைகளை மறைத்து, பாகிஸ்தானை வைத்துப் பூச்சாண்டி காட்டி இந்திய அரசுக் கட்டுமாணத்திற்குள் வைக்கப்பட்டுள்ள பல்வேறு தேசங்களையும் சார்ந்த மக்களை திசை திருப்ப முயல்கின்றது.

தமிழீழக்குடியரசு விரைவிலோ சற்று தாமதமாகவோ அமையப்போவது உறுதி. அந்தத் தீ பொறியானது இந்திய தேசிய அடக்குமுறை ஆட்சி முறையில் ஒரு தகர்வினை ஏற்படுத்துவதும் உறுதி. சோவியத்தின் தகர்வை எப்படி தடுத்து நிறுத்த முடியாது போனதோ, அதை விட மோசமான தேசிய அடக்குமுறையைக் கொண்டுள்ள இந்தியாவின் தகர்வும் உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது. தற்போது தீவிரமடைந்து வரும் திறந்த பொருளாதாரக் கொள்கையானது வேகமாக பிளவுகள் நடைபெறுவதை நோக்கியே இட்டுச் செல்கின்றது.

இந்நிலையில், இந்தியா எனும் தமது விரிவான சுரண்டல் பிரதேசத்தை முடிந்தவரையில் சிதறவிடாது பாதுகாத்துக் கொள்வதற்காக, அடிமைச் சங்கிலியை அறுத்தெறியும் தறுவாயை நெருங்கிக் கொண்டிருக்கும் எங்கள் தேசத்தின் மீது இன்னுமின்னும் புதிய கால் விலங்குகளை பூட்டுவதற்கு இந்திய அரசும் அதன் அணிகளாக மாறியுள்ள மேற்குலக அரசுகளும் முயல்கின்றன.

மேற்கண்ட துல்லியமான இலக்குடன், ஏகாதிபத்திய அரசுகளும் இந்திய ஆளுங்குழுமமும் சிறிலங்கா ஆளுங்குழுமத்துடன் இணைந்து தமக்குள் ஒரு ஆதிக்ககூட்டிணை அமைத்துக் கொண்டு, அமைதித் தீர்வினைக் கொண்டு வரப் பாடுபடப் போவதாக சர்வதேச சமூகத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளும் சிறிலங்கா அரசின் இறைமைக்கு எவ்வித கீறல்களும் வராத வண்ணம் முயற்சிகளை மேற்கொள்வதாகவும் காட்டிக்கொள்கின்றன. அதற்கு ஒத்துழைப்பு தரும்படி இந்த ஆதிக்க கூட்டினால் அடக்கியொடுக்கப்பட்டு வரும் எமது மக்களைப் பார்த்து இவ்வாதிக்க அரசுகள் வலியுறுத்துகின்றன.

அவ்வாறாயின், இந்த கடுமையான யதார்த்தத்தை துணிகரமாக எதிர்கொண்டு உள்ளார்ந்து தன்னளவில் ஒரு மக்கள் யுத்த வழிமுறையையும், புறம் சார்ந்து பிராந்தியமெங்கும், உலகெங்கும் உள்ள அடக்கப்படும் மக்கள், அடக்கப்படும் தேசங்களுடன் **ஒரு புரட்சிகர குழுமத்தை** அமைப்பதை நோக்கியும் முன்னேறுவோம். ஒரு கட்டம் வரைக்கும் எமது தேசியப்பிரச்சனைக்குரிய தீர்வினையும் அதற்கான போராட்ட வழிமுறைகளையும் எமது எல்லைக்குள் நம்தேசம் மட்டுப்படுத்தி வைத்திருந்தது நியாயமே. அதற்கான கொடுத்த விலைகளும் ஏராளமே.

நமது தேசிய நலன்களை சிங்கள ஆளுங்குழுமத்துடன் விலை பேசிக் கொண்டு நம் மண்ணில் கால்பதித்த இந்திய ஆக்கிரமிப்பு படை நம்மக்களால் ஓட விரட்டப்பட்டது. இன்று அமெரிக்க, பிரித்தானிய அரசுகள் தமது கேடுகெட்ட வரலாற்றுப் பெருமைகளையும் இராஜதந்திர வல்லமைகளையும் மார்தட்டிக் கொண்டு நுழைந்திருக்கின்றன. மீண்டும் நமது இறைமை நமது தேசிய நலன்கள் சிங்கள ஆளுங்குழுமத்தின் சார்பில் விலைபேசப்படுகின்றது.

ஏகாதிபத்தியத்தினதும் இந்திய வல்லாதிக்கத்தினதும் கோர நகங்கள் நம் சின்னஞ்சிறு தேசத்தின் கழுத்துவரை நெருங்கிவிட்டன. தேசமாக திரண்டு சூழந்துவரும் இப்பகையை முறியடிக்கத் தயாராவோம்.

தருமு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையகம் :

## எழுச்சி மிகு தொடர் பேரணிகள்

## பிராந்தியத்தின் கொதி தளங்களுக்குத் தரும் புரட்சிச் செய்தி

மலையத் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கப்போராட்டம் தெள்ளத் தெளிவாக ஒரு அரசியல் போராட்டமே. வர்க்கப்போராட்டத்தின் ஒரு வடிவமே. பதினெட்டாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் நிகழ்ந்த பரீஸ் பேரெழுச்சி உலக வரலாற்றின் பக்கங்களை நிரப்பிக் கொண்டது போல இப்போராட்டம் தன் முத்திரையை இந்நாட்களில் பதிக்கின்றது. உலகத் தொழிலாளர் அனைவரதும் கவனத்தை ஈர்த்துக் கொண்ட அன்றைய பாரீஸ் பேரெழுச்சி அலையில் தொழிலாளர் வர்க்கம் அணி அணியாய்திரண்டது. இதனால் உலக முதலாளித்துவ வல்லாதிக்க சக்திகள் முதன் முதலாக பெரும் நெருக்கடியை எதிர்கொண்டது. அஞ்சி நடுங்கியது. அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்று முடிவெடுக்க முடியாமல் மார்க்சிய மூலவர்களே திகைத்து நின்ற புரட்சி அது.

அவ்வாறான ஒரு எழுச்சியும்புதிய புதிய திருப்பங்களும் கொண்டதாக இன்றுமலையத் தொழிலாளர்களின் போராட்டம் புதிய வடிவங்களைப் பெற்று வருகின்றது. சமூகத்திலுள்ள அனைத்து சக்திகளதும் ஒன்றுபட்ட ஆதரவைப் பெற்று வருகின்றது. எதிரிகள் திகைத்து தடுமாறுகின்றனர். பாரீஸ் கொம்யூனில் பெற்ற படிப்பினைகள் மாபெரும் அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கு வழிவகுத்தது. அதன்பயனாக வரலாற்றில் அழியா இடத்தைப் பிடித்துக் கொண்ட புதிய புரட்சிப் பக்கம் திறக்கப்பட்டது. அது போலவே மலையத்தொழிலாளரின்இப்போராட்டமானது அவர்களது அரசியல்புரட்சியின் தொடக்கத்திற்கான கதவைத்திறந்து விட்டுள்ளது. இதற்கு சற்று காலத்திற்கு முன்னர் நடைபெற்று பிந்துனுவெல கண்டனப்போராட்டம் வரலாற்றுப்புகழ்




மிக்க இன்னுமொரு கட்டியமாக அமைந்தது. ஆக, மலையகத் தமிழ் தேசத்தின் போராட்ட சக்திகள் கொதித்தெழத் தொடங்கிவிட்டன.

மலையத்தமிழ் தேசத்தின் மூல விசையான தொழிலாளர்கள் தமது ஊதிய உயர்விற்கான கோரிக்கைகளை முன்வைத்து சில வாரங்களாக சத்தியாக்கிரகம், வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் என்பவற்றை முனைப்பாக நடாத்தி வருகின்றனர். தொழிலாளர்களோடு, மாணவர் சமூகம், ஆசிரியர் சமூகம், வர்த்தகர்கள், மதகுருமார்கள், அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் அதன் தலைவர்கள், ஊடகங்கள், அரசியல் கட்சிகள் இணைந்து தீவிரமாக செயற்படுவது அரசிற்கு பெரும் தலையிடிகொடுத்து வருகின்றது.

ஒன்றரை நூற்றாண்டு கால அடிமைத்தனங்களின் சுவடுகளை உடைத்தெறியத் துணிந்திருக்கும் மலையத் தோட்டத் தொழிலாளர்கள்புடம்போடப் பட்ட தங்களது நீண்ட போராட்டத்தின்இன்னுமொரு உன்னத கட்டமாகவும் பிரதானமாக அரசியல்பரிமாணம்கொண்டதாகவும் இப்போராட்டத்தில் மூலம் முத்திரையை பதித்து வருகின்றனர். பிந்துனுவெல படுகொலைக்கும் பின்னர் வெடித்தெழுந்த மலையத் தேசியப் பேரெழுச்சியானது, சிங்கள-பௌத்த இனவெறி பாசிசத்தை எதிர்த்து எரிமலைக் குழம்பாகியது. இவ்வெழுச்சியை மலையத்தேசத்தினை அடக்கும் அதிகாரத்துவ சக்திகள் காட்டிக் கொடுத்து ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடத் துணைபோயினர். இதன் பின்னர், நீண்ட காலம்மலையகம் எழுந்து நிற்க முடியாதெனக் கொக்கரித்த அரச பயங்கரவாதிகளுக்கும் சிங்கள இனவாதிகளுக்கும் இன்றைய போராட்டமானது பேரிடியைக் கொடுத்துள்ளது.

மலையகம்ஒரு தேசமாக, பல்வேறு சக்திகளின்இணைவாக, தொழலாளர்களின் தலைமையில் ஒன்று பட்டு நிற்கின்றது. ஒரே குரலில் முழங்குகின்றது. இப்படிப்பட்ட நிலையிலும் கூட மக்களைக் காட்டிக்கொடுக்கும் சில கைங்கரியங்கள்நடைபெறாமலில்லை. அரசுக்கும் கொள்கைக்காரக் கொம்பனிகளுக்கும் அடிவருடிகளாக சிலர் செயற்படவே செய்கின்றனர். இருந்தும் இதனையிட்டு மக்கள் விளிப்பாகவே இருக்கின்றனர்.

போராட்டங்களில் பங்கெடுத்து வரும் சில தலைமைகளின் பலவீனங்களைப் பயன்படுத்தி போராட்டத்தை சிதறடிக்க முயன்ற அரசும் தோட்டக் கொம்பனிகளும், மக்கள் அலை அலையாகவும் அடுத்தடுத்தும் கொடுத்து வரும் அழுத்தங்கள், நெருக்கடிகள் காரணமாக பணிந்துவர வேண்டிய நேரம் நெருங்குகின்றது. மக்கள் தமது கோரிக்கைகளை வெற்றி ஈட்டுவது திண்ணம்.

தொழிலாள மக்களினதும் அவர்களுக்கு ஆதரவான சக்திகளதும் இப் பேரெழுச்சியானது தமிழீழம், சிறிலங்காவில் மட்டுமல்ல இப்பிராந்தியம் முழுவதிலும் கூட அடக்கப்பட்ட மக்களின் கரிசனைக்குள்ளாக்கியது. அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டுப் பிரச்சனைகளில் இருந்து மக்கள்பேரலையாக கிளர்ந்தெழ முடியும் என்பதற்கு மலையக தேசத்தின் போராட்டத்தின்வடிவங்களில்இருந்தும் அனைவரும் புரட்சிகர படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வோம்.

**ரொபட்**

# அமெரிக்கருக்கு நம் தேசத்தின் ஏகோபித்த பதில்!

அண்மையில் அமெரிக்க இராஜதந்திர முகவர் வில்ஸ் யாழ்ப்பாணத்தில் மக்களின் முன்னிலையில் ஆற்றிய உரை நமது மக்களை ஆத்திரமூட்டுவதாயுள்ளது. விடுதலை புலிகளின் மீது பிரித்தானியா நெருக்குதல்களை மேற்கொண்டுவரும் நேரத்தில், தன் ஏகாதிபத்திய சகாவுக்கு ஒருமைப்பாட்டை தெரிவித்திடவும், நமது போராட்டத்தை தன் பங்கிற்கு நேரடியாக அச்சுறுத்தவும் அமெரிக்கா அரசு மேற்கொண்ட அத்துமீறல்தான் வில்ஸின் இவ்வுரையாகும்.

ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமைக்கான எழுச்சிப் போராட்டமானது நமது தேசமெங்கும் பற்றிப்பரவி சர்வதேச அரங்கிலும் காத்திரமான பிரதிபலிப்புகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ள நிலையில், நமது உரிமைக் குரலின் நியாயத்தின் முன்னால் தோல்வியுற்றுப் போன இவர்கள், நேரடியாக நமது தாயகத்தின் ஒருபகுதியில் நின்று கொண்டு அச்சுறுத்தல் விடுப்பதன் மூலம் விடுதலைக்கோசமிடும் நம்தேசத்தின் குரல்வளையைத் திருகிடலாமென தப்புக் கணக்குப்



போட்டுள்ளனர்.

ஈழத்தமிழரான நமது அடிப்படை வாழ்வுரிமையை மறுதலித்திடும், நமது தேசிய இருத்தலின் ஆணிவேரையே அறுத்தெறிந்திடும் விதமாக அமெரிக்க முகவரால் முன்வைக்கப்பட்ட வன்மமும் திமிர்த்தனமும் நிறைந்த அரசியல் கருத்துக்கள்: 'வடக்கு - கிழக்கு பாரம்பரிய தாயகம் என்பது தீவிரவாத கருத்தாகும், 'இலங்கையில் சுதந்திர தமிழ்நாடொன்று பிரித்தெடுக்கப்படுவதை அமெரிக்கா நிராகரிக்கிறது, 'அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரானது, 'பலரும் அமெரிக்காவிடம் கேட்கிறார்கள் ஏன் விடுதலை புலிகள் மீது யுத்தம் தொடுக்க வில்லை என, 'புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிடுவதுடன் வன்முறையைக் கைவிட வேண்டும்.......

நமது தாயகத்தின் மீது நமக்கிருக்கும் பிணைப்பை, உரிமையை நாம் வெளிப்படுத்துவது தீவிரவாதக் கருத்து என்கிறார். சுதந்திர தமிழீழ அரசு அமைவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்கின்றார். நம் சுயாதீனத்தை மறுதளிக்கின்றார். 1700 களின் பிற்பகுதியில் பிரித்தானிய வரிவிதிப்புக்கு எதிராக ஆயுதமேந்திப்போராடி தனிஅரசின் கீழ் அமெரிக்க நாட்டைக் கொண்டு வந்ததை வசதியாக மறந்து விடுகின்றார்.

தமிழீழ மக்களான நாம் ஒற்றை ஆட்சி என்ற அடக்குமுறைகளிலிருந்து எம்மை விடுவித்துக்கொண்டு சுதந்திர அரசை அமைக்க முயல்வதை பயங்கரவாதம் எனக்கூறும் இந்த ஏகாதிபத்திய எத்தர்கள யூத சியோனிசவாதிகளுக்கு, “மூதாதையரின் வாக்களிக்கப்பட்ட பூமி” என கற்பனையில் உதித்த கருத்தாக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, பாலஸ்தீன மக்களின் மண்ணை அபகரித்து இஸ்ரேல் எனும் நாட்டை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இஸ்ரேலின்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஊடகவியலாளர்கள்

மனித சமூகம் பொருளாதார, அரசியல், கலாச்சார மற்றும் தளங்களில் வளர்ச்சி அடைய அடைய புதிய சமூக பிரிவினர்கள் சமூகத்தில் தோன்றுகின்றனர். தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இலத்திரனியல் ஊடகம் உலகெங்கும் வியாபிக்கத் தொடங்கியிருப்பதானது, தற்போது மனிதகுலத்தை மிகவும் நெருக்கமான தொடர்புமுறைக்குள் கொண்டுவந்துள்ளது. தகவல் பரிமாற்றம் அல்லது தொடர்பாடல் என்பது இன்றைய மனித சமூகத்தின் பிரதான தேவைகளிலொன்றாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. இதன் விளைவாக மிகவும் பரந்ததும், வலுவானதும் பன்முகத்தளங்களைக் கொண்டதுமாக ஊடகத்துறை உருவாகியுள்ளது. இவை சார்ந்து ஊடகவியலாளர்கள் எனும் பிரிவினர்கள் உருவாகியுள்ளனர். தன்னளவில் ஊடகத்துறை சுயாதீனமான துறையாகவும் ஒரு வலுவான நிறுவனமாகவும் மாறியுள்ளது.

தமது நீடித்த அரசியல், பொருளாதார, இராணுவ ஆதிக்கத்தை மனித குலத்தின் மீது நிலை நிறுத்துவதில் தீரா வெறிகொண்டிருக்கும் ஏகாதிபத்தியங்கள், தம்மால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பெரும் ஊடக நிறுவனங்கள் துணைகொண்டு ஏகாதிபத்திய நலன்காக்கும் சித்தாந்தத்தை சமூக மயப்படுத்தி வருகின்றன. இந்த ஏகாதிபத்தியங்களை அண்டி அவற்றிற்கு சேவகம் செய்யும் ஊடகவியல் நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் மேலை நாடுகளில் போன்றே மூன்றாமுலக நாடுகளிலும் உள்ளனர். தாம் சார்ந்த பிற்போக்கு அதிகார வெறிகொண்ட அரசுகளினதும் ஏகாதிபத்தியங்களின- தும் மக்கள் விரோத, மனிதகுல நாசகாரத்திற்கான நடவடிக்கைகளை எல்லாம் சமூக நலன் சார்ந்ததாக மிகவும் நுட்பமாக பிரச்சாரப்படுத்துகின்றனர். மக்களை ஆதிக்க சக்திகளின் தேவைகளுக்கேற்ப செயற்பட இப்பிரிவினர் தூண்டி வருகின்றனர்.

முற்றிலும் பரந்துபட்ட மக்களின் நலன்களிற்கு எதிராக ஊடகத்துறையை உபயோகிக்கும் இவர்கள் அதிகாரத்துவ சக்திகளினதும் அடக்குமுறை அரசுகளினதும் அனுசரனையுடன் தமக்கான நலன்களை ஸ்தாபித்துக் கொள்கின்றனர். பிரதானமாக இவர்களே இன்று ஊடகத்துறையின் போக்குகளையும் பண்பையும் தீர்மானிக்கும் சக்திகளாக இருந்து வருகின்றனர்.

அதேசமயம், மக்களின் அன்றாடப் பிரச்சனைக- ளுடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ள, மக்களின் அடிப்படை மனித உரிமைகளுக்காகவும், ஜனநாயக வாழ்விற்காகவும் குரல்கொடுத்துவரும் மாற்று ஊடக நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் பொதுவிலும் நமது சூழலிலும் நாம் காண்கிறோம். எமது பிரதான நேச சக்திகளும் அக்கறைக்குரி- யவர்களும் இவர்களே.

எதேச்சாதிகார அரசியல் அமைப்பையும், ஊழல் படிந்த அரச நிர்வாக, சுரண்டல் பொருளாதார செயற்பாடுகளையும், ஊடகத்துறையில் பிரதான இடத்திற்கு வந்துள்ள சீரழிவுக் கலாச்சார பிரச்சா- ரங்களையும், அரச மற்றும் சமூக அளவிலான வன்முறைப் போக்குகளையும் தயவுதாட்சன்யமின்றி மக்களுக்கு அம்பலப்படுத்திவரும் ஊடகவியலா- ளர்களே **மக்கள் நலன்சார் பிரிவினராகும்.** ஆனால் அதிகார அரசுகள் இவ்வூடகவியலாளர்களை திட்டமிட்டு அடக்குகின்றன. தமது வன்முறை இயந்திரத்தையும் குண்டர்களையும் ஏவி, ஊடகவியலாளர்களை ஆதிக்க சக்திகள் தாக்குகின்றன. உளவுப் பிரிவின் கண்காணிப்புக்குள் வைத்திருக்கின்றன, ஊடகவியலாளர்களின் தொழில் சாதனங்களையும், தகவல் சேகரிப்புகளையும் சிதைக்கின்றன. படுகொலையும் செய்கின்றன.

இவ்வாறு வெகுஜன நலனை பிரதிநிதித்துவப்- படுத்தும் ஊடகவியலாளர்களை அரசுகள் அடக்கிவருவதுடன், குறிப்பாக மூன்றாமுலக நாடுகளில், ஊடகவியலாளர்களுக்கு அடிப்படை துறைசார் தொழில்வாய்ப்புகள் அரசால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதில்லை. ஊடகவியலாளருக்கான அரசகொடுப்பனவுகள், உற்சாகப்படுத்தல் உதவிகள், தொழிற்திறனை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சித் திட்டங்கள் போன்றன, பெரிதும் நிராகரிக்கப்பட்டு வருகின்றன. வாழ்க்கைத் தேவைகளுடன் போராடியபடிதான் இவர்கள் தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

சுதந்திர ஊடகத்துறையின் மீதான அரச அடக்குமுறைகள், உதாசீனங்களைக் கடந்து மனித உரிமைக்கும் ஜனநாயகத்திற்குமான ஊடகவிய- லாளர்களின் குரல் உலகெங்கும் எதிரொலித்த வண்ணம்தான் இருக்கிறது.

> நமது இரத்தத்தினாலும் உயிர்த் தியாகங்களினாலும் தமக்கான தேச அரசை ஸ்தாபித்துக் கொண்டிருக்கும் தமிழீழத்தின் அடக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் குரலாக ஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் என்றென்றும் அமைந்திட வேண்டும்.

சுதந்திர ஊடகத்துறையின் மீது எப்பொழுதும் தீராப்பகைமையை வெளிப்படுத்தி வருவதிலும் ஊடகவிளலாளர்களை நசுக்கியழிப்பதிலும் கைதேர்ந்த சிறிலங்கா அரசு, 20 வருடகால ஆக்கிரமிப்பு யுத்தத்தின் மூலமாக தமிழீழத்தின் ஊடகத்துறையையும் சிறந்த ஊடகவியலாளர்களை- யும் தலைதூக்க விடாது திட்டமிட்டு நசுக்கிவருகிறது. சர்வதேச அளவில் செயற்படும் நமது தேச நலன்சார்ந்த ஊடகத்துறைகளையும் கூட தனது அரசுயந்திர வலைப்பின்னல் கொண்டு முடக்கு- கின்றது. சிங்கள ஊடகத்துறையின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் தமிழீழத்தின் ஊடகத்துறை மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கு இந்த இனவெறி ஆக்கிரமிப்பே பிரதான காரணம். இதன்மூலம் உலகின் பொது நீரோட்டத்திலிருந்து எம்மை தேசமாக ஓரங்கட்டி உலக நடப்பைப் பற்றிய தகவல்களை அறிந்திராத பின்தங்கிய மக்கள் சமூகத்தினராக வைத்திடுவதிலும், எமது தரப்பு நிலைமைகளை சர்வதேசத்திற்கு கொண்டு செல்லப்படாமாலும் நீண்டகால நோக்குடன் செயல்பட்டு வருகிறது.

எனினும், என்னதான் சிங்கள அரசு நம்தேசத்தின் ஊடகத்துறையை சிதைப்பதில் முயற்சிகளை மேற்கொண்டுவரினும், மக்கள் நலனில் அக்கறையுள்ள தேசப்பற்றுமிக்க ஊடகவியலாளர்கள் நம் தேசத்தில் உருவாகிவருவதை அதனால் தடைசெய்ய முடியாது போயுள்ளது. தமக்குக் கிடைத்திருக்கும் மிக எளிமையான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, அரச அடக்குமுறைகளையெல்லாம் சவாலாகக் கொண்டு மக்களுக்குத் தகவல்களைக் கொண்டு செல்வதில் நமது ஊடகத்துறையினதும் ஊடகவிய- லாளர்களினதும் பாத்திரம் மிகவும் மெச்சத்தக்கது. இதற்கென தமது உயிர்களையும் நமது ஊடகவிய- லாளர்கள் அர்ப்பணித்துள்ளனர்.

மிகச்சில ஊடகவியலாளர்களையே நமது தேசம் கொண்டிருப்பினும் கூட, முடிந்தவரையில் தேசத்தின் அன்றாட யுத்த நிகழ்வுகளையும், அரசின் அட்டூழியங்களையும், மக்களின் அவலங்களையும் சர்வதேச மயப்படுத்துவதில் தமிழீழ ஊடகவிய- லாளர்கள் பின்னடையவில்லை. சிங்கள அரசின் பொய்ப்பிரச்சாரங்களை எல்லாம் சர்வதேச அரங்கில் முறியடித்திட பிரயத்தனம் எடுத்துக் கொள்ளும் தமிழீழ ஊடகவியலாளர்களை பயங்கரவாதிகள் எனக் குற்றஞ்சாட்டிக் கைதுசெய்து சிங்கள அரசு துன்புறுத்தி வருகிறது. கைக்கூலிகளை ஏவிப் படுகொலை செய்கிறது. இப்படியாக, தமிழீழத்தின் ஊடகவியலாளர்கள் எக்கணத்திலும் தமது உயிருக்கு ஆபத்து நிகழக்கூடிய நிலைமையில் தான் செயற்பட வேண்டியவர்களாயுள்ளனர்.

மறுபுறம், போராட்ட சூழலில் உருவாகியுள்ள எதேச்சாதிகார, ஜனநாயக மறுப்பு அரசியல் போக்குகளை மக்கள் நலனில் நின்று விமர்சன பூர்வமாக அணுகவும் மக்கள் மயப்படுத்தவுமான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக மக்களின் சார்பில் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதில் விடுதலைப்புலிகள் உட்பட ஏனைய தமிழ்க் கட்சிகளிடம் இருந்தும் கூட அச்சுறுத்தல்களையும் கொலைகளையும் தொடர்ச்சியாக எதிர்கொள்ள நேர்கின்றது.

தமிழீழத்தின் அடிப்படை சமூகப் பிரிவினர்களி- னதும் அடக்கப்படும் மக்களினதும் நலன்களை உறுதிப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு அமைக்கப்படும் தமிழீழ ஜனநாயகக் குடியரசானது, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவதுடன், தமிழீழ ஊடகதுறையை சுயாதீனமாக வளர்த்தெடுப்பதிலும் அடிப்படை பௌதீக தேவைகளை பூர்த்திசெய்வதி- லும் அக்கறைகொள்ள வேண்டும். அவ்வாறே இவர்களின் பங்களிப்புகளை நமது தேசம் தனது வரலாற்றில் குறித்துக்கொள்ளவும் வேண்டும்.

நமது இரத்தத்தினாலும் உயிர்த்தியாகங்களி- னாலும் தமக்கான தேச அரசை ஸ்தாபித்துக் கொண்டிருக்கும் தமிழீழத்தின் அடக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் குரலாக ஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் என்றென்றும் அமைந்திட வேண்டும்.

அங்கவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## 2001ஆம் ஆண்டின் சர்வதேசப் பெண்கள் தினத்தில் தமிழீழப் பெண்களின் பிரகடனம்:

# தேசசுயநிர்ணய உரிமையும் பெண்ணுரிமையே!

பங்குனி மாதம் 8ம் நாள், 90வது சர்வதேசப்பெண்கள் தினத்தை உலகப் பெண்களுடன் இணைந்து தமிழீழப் பெண்களான நாமும் கொண்டாடுகிறோம். பெண்கள் தமது அடிப்படை உரிமைகள் அனைத்தையும் வென்றுகொள்வதற்காக மேற்கொண்டு வந்த நீண்ட போராட்ட அனுபவங்களின் மூலமாக தமக்கான நாளை வரலாற்றில் நிச்சயித்துக் கொண்டனர். பெண்களின் இப் பெருநாளில் தமிழீழப் பெண்களான நாமும் நமது உரிமைகளை வென்று கொள்வதற்காக உலகெங்கும் ஓரணிதிரளும் நம் தோழியருடன் கரங்கோர்த்து நமது உரிமைகளுக்காக போர்முரசறைவோம்.

உரிமைகள் என்பவை உலகளாவிய வகையில் பெண்கள் அனைவருக்கும் பொதுவானவையாகவும், குறிப்பான சூழ்நிலையில் வாழும் பெண்களுக்கான குறிப்பான உரிமைகளாகவும் பரவிவிரிந்துள்ளன. பெண்களின் பொதுவான உரிமைகளுக்காக உலக-ளாவிய அளவிலான பொதுவான போராட்டங்களுடன் இணையும் அதேசமயம் நமது குறிப்பான உரிமைக-ளுக்காக நாம் தமிழீழப் பெண்கள் எனும் தனித்துவ அடையாளத்துடன் போராட வேண்டியவர்களா யுள்ளோம்.

தமிழீழப் பெண்களான நாம் இன்று எதிர்கொண்டு நிற்கும் பிரதான உரிமையாக நமது தேசத்தின் சுயநிர்ணய உரிமை உள்ளது. தேச சுயநிர்ணய உரிமையை எப்படி பெண்ணுரிமையாக அடையாளப்-படுத்துவது எனும் கேள்வி நம்மில் பலருக்கும் எழுவது வியப்பில்லை. ஏனெனில், இன்று ஜனரஞ்சக அரங்கில் வெளிப்படும் பெண்ணிய கருத்துகள் பெரும்பாலும் தேசியம் என்பதற்கு எதிரான கருத்துக்களைத்தான் பிரச்சாரப்படுத்தி வருகின்றன.

தேசம் என்பது நமக்கு வெளியிலுள்ள ஒரு கருத்தாக்கமல்ல. தேசம் என்பதை தமக்கான பொதுவான வரலாற்றைக் கொண்டுள்ள மக்கள்திரள் எனக் கொள்வோமாயின், தேசம் என்பது நாம்தான். பெண்களும், ஆண்களும், சிறுவரும், பெரியோருமாக நம்மனைவரினதும் திரட்சிதான் நமது ஈழத்தமிழ் தேசம். நமது உணர்விலும், வாழ்விலுமாக நாமே தேசமாகத் திகழ்கிறோம்.

மனித இனத்தின் நீடித்த இருத்தல் உயிரியல் வகைப்பட்டு பெண்களில்தான் தங்கியுள்ளது என்றால், நமது தேசத்தின் இருத்தல் பெண்களான நம்மில்தான் மையப்பட்டுள்ளது. ஆம், பெண்களான நாம்தான் நமது தேசத்தை உயிரியல் சார்ந்து மறுஉற்பத்தி செய்கி-றோம். உயிரியல் வகைப்பட்டு தேசத்தின் இருத்தலை, தொடர்ச்சியை பாதுகாத்து வருகிறோம். பெண்கள் இன்றேல் தேசம் இல்லை. அவ்வளவில் ஈழத்தமிழ் தேசத்தின் ஆதார சக்தி பெண்களான நாம்தான்.

ஆனால், ஈழத்தமிழ் பெண்களான நாமும் (நமது தேசத்தின் ஆண்களுமாக) நமது தேசிய உரிமை அபகரிக்கப்பட்டவர்களாக வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம். தேசமாக நாம் வாழ்வதற்கான உரிமையை சிங்கள சோவினிசம் தனது இரும்புப் பாதங்களால் நசுக்கிக் கொண்டிருக்கிறது.

பெண்கள் எனும் வகையில், உலகளாவிய அளவில் பெண்கள் அனைவரும் எதிர்கொள்ளும் பொதுவான அடக்குமுறைகளுடன், நமது சமூகத்திற்-கேயுரிய குறிப்பான வாழ்வியல் முறைகளுடன் கூடிய ஆணாதிக்க அடக்குமுறைகளையும் ஈழத்தமிழ் பெண்களான நாம் எதிர்கொண்டு வருகிறோம். இவற்றுடன் நமது தேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சிங்கள சோவினிச அடக்கு-முறையை அதன் பல்வேறு ஆணாதிக்க வடிவங்களி-லும் ஈழத்தமிழ் பெண்களான நாம் குறிப்பாக எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. ஈழத்தமிழ் பெண்களாக இன்று நாம் எதிர்கொள்ளும் அனைத்து வகையான பேரிடர்களுக்கும் அடிப்படை காரணம் சிங்கள சோவினிசம் என்றால் அது மிகையில்லை.



அடக்கப்படும் தேசத்தின் சுமைகளைத் தாங்கி நிற்கும் பெண்கள் நம்மீது சிங்களப் படைகள் ஆணாதிக்க வெறியாட்டம் புரிகின்றன. நமது உடலை வன்முறைக் களமாக்கிடும் சிங்களப் படைகளை தண்டிப்பதற்கான சட்டரீதியான அதிகாரங்கள் நம்மிடம் இல்லை. சட்டத்தை சிங்கள அரசே கட்டுப்-படுத்துவதால் அது தனது படைகளைப் பாதுகாக்கிறது. ஆயுதந்தரித்த படைகளை நிராயுதபாணிகளாக எதிர்கொள்ளும் நிலைமை நமது மக்களுக்கு நேர்ந்திருப்ப-தால், பெண்கள் மீதான சிங்களப் படைகளின் வன்முறைகளை தடுத்திட முடியாத சமூக சூழல் நிலவுகிறது.

நீண்டகால யுத்தத்தின் பேரழிவுகளால் நமது தேசத்தின் சீரான சமூக இயக்கம் சிதைக்கப்பட்-டுள்ளது. நமது சமூகம் தன்னை நெறிப்படுத்திக் கொள்வதற்காக தானே உருவாக்கியிருந்த பாரம்பரிய சமூக அறநெறிகள், விழுமியங்கள் (ஒப்பீட்டளவில் இவை பெண்களுக்கு சமூக பாதுகாப்பு தருவனவும் கூட) இன்று சிதைவடைந்து செல்வதால், சமூகத்தில்



இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் பெண் மேலும் அடக்குமுறைகளை எதிர் கொள்ள காரணமாகிவிட்டுள்ளது. குடும்ப ஆண்களினாலும் உள்ளூர் ஆண்களாலும் பெண்கள் மீதான துன்புறுத்-தல்கள், வன்கொடுமைகள் அதிகரித்து வருகின்றன.

இப்படியாக, எதிரி தரப்பினாலும் சமூகத்தினாலும் இரட்டை அடக்குமுறைக்கு தமிழீழ பெண்களான நாம் உள்ளாகி வருகிறோம்.

எனினும் நமது ஆத்ம பலத்தைத் திரட்டி பீனிக்ஸ் பறவைகள் போல் நமது தேசத்தை தோளில் சுமந்த படி மீள மீள உயிர்க்கும் பேராற்றலை தமிழீழ பெண்களான நாம் கொண்டிருக்கிறோம். நமது உழைப்பாலும், போராட்டத்தாலும் பெண்களின் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை தமிழீழ பெண்களான நாம் படைத்து வருகிறோம் என்பதை இப் பெண்கள் தினத்தில் உலகுக்கு அறிவித்திடுவோம்.

பெண்கள் நமது மனோதிடத்தில், உழைப்பில் நமது தேசம் தன்னை மீள நிர்மாணிக்கும் உள்ளாற்றலைக் கொண்டிருப்பதை சிங்கள அரசு அறிந்திருப்பதால் நமது மனோதிடத்தை தகர்த்திட திட்டமிட்டு செயற்படுகிறது. நம்மை அவமானப்படுத்துகிறது. நமது உடலைச் சிதைக்கிறது. பாலியல் சித்திரவதை சார்ந்த அச்சத்தை நமது தேசத்தில் விதைக்கிறது. இதன் மூலம் பெண்கள் நம்மை செயலற்ற பிரிவினராக கட்டிப் போட முனைகிறது. எதிரியினால் நமக்கு ஏற்படும் இந்த அனைத்து விதமான அடக்குமுறைகளுக்கும், அவமானங்களுக்கும் முடிவுகட்ட வேண்டுமானால் நாம் தேசிய ரீதியாக விடுதலையடைந்திட வேண்டும்.

ஆம்! தேச அடக்குமுறையினூடாக பெண்களாக நாம் எதிர்கொண்டுவரும் குறிப்பான அடக்குமுறை-களை, தேச விடுதலையை வென்றுகொள்வதன் மூலம் மாத்திரமேயே நம்மால் முடிவுக்குக் கொண்டுவர முடியும். அவ்வகையில் தேச அடக்குமுறையை எதிர்-கொள்ளும் மக்கள் சமூகங்களைச் சார்ந்த பெண்களின் அடிப்படை உரிமையில் தமது தேசத்தின் விடுதலைக்கான, தேச சுயநிர்ணயத்திற்கான உரிமையும் உள்ளடங்குகிறது எனும் உண்மையை நாம் தெளிவாக அடையாளங்காண்போம்.

**தேச சுயநிர்ணய உரிமையும் மனித உரிமையே**. . . ஐ.நா. மனித உரிமை அறிக்கை கூறுகிறது. மறுபுறம், **பெண்ணுரிமையும் மனித உரிமையே** என ஐ.நா. பெண்கள் சாசனம் கூறுகிறது. **தமது தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க பெண்கள் கொண்டுள்ள உரிமை மனித உரிமையே. அவ்வகையில் அது ஒரு பெண்ணுரிமையே.** மறுதலிக்கப்பட முடியாத இந்த உண்மையை தமிழீழப் பெண்களான நாம் நமது கைகளில் எடுப்போம். அதற்காக விட்டுக்கொடுக்-காமல் இறுதிவரை போராடுவோம்.

சகோதரிகளே! நமது பெண்ணுரிமைப் போராட்-டத்தில் நம் தேசத்தின் சுயநிர்ணயத்திற்கான உரிமையையும் உள்ளடக்குவோம். தேச சுயநிர்ண-யத்திற்கான அசைக்க முடியாத நியாயத்தை பெண்களின் கண்ணோட்டத்தில், பெண்களின் குரலில் வெளிப்படுத்துவோம்.

சர்வதேசமெங்கும் புலம்பெயர்ந்து வாழும் நம் சகோதரியர், **தமிழீழப் பெண்களின் தேச சுயநிர்ணயத்திற்கான போர்க்குரலாக** செயற்-பட வேண்டிய தருணமிதே. தேச விடுதலையில் தமிழீழப் பெண்கள் கொண்டுள்ள நலன்களை, பெண்களின் தேசிய அபிலாஷைகளை பிரச்சாரப்-படுத்த வேண்டிய கட்டம் இதுவே. சர்வதேச சட்டங்க-ளுக்கு எவ்விதத்திலும் முரணற்ற வகையில் தமிழீழப் பெண்களின் உரிமையுடன் தேசிய சுயநிர்ணயத்திற்-கான உரிமை பிண்ணிப் பிணைந்திருப்பதை அனைத்து மக்கள் சமூகங்களுக்கும், அனைத்துலக நிறுவனங்களுக்கும் எடுத்துரைக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுவே.

.. சுபத்திரா

# போரைத் தவிர அரசிடம் வேறேதும் இல்லை!

தற்போதைய பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் கடந்து செல்லும் காலமானது ஒட்டுமொத்த மக்களுக்கும் நிச்சயமற்றதாக உள்ளது. அதே போன்று பெரும் அழிவை நோக்கி முழுச் சமூகத்தையும் கொண்டு செல்லுவதாகவும் உள்ளது. பலதரப்பட்ட நிலைமைகளால் உருவாக்கப்பட்ட இந் நிலைமையானது, அரசின் சிக்கலான பண்பையும், நிரந்தரமில்லாத் தன்மையையும் சுட்டிக் காட்டுகின்றது. யுத்தத்தின் மூலம் தேசிய பிரச்சினை மென்மேலும் உக்கிர நிலையை அடையச் செய்கிறது.

இன்னொரு பக்கம் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்லும் பொருளாதார நிலைமையானது விசேடமாக வறுமை வகுப்பினரையும் கீழ் மத்திய வகுப்பினரையும் தெளிவாக தாக்கி வருகின்றது. கூலியிலும் மாதாந்த வருவாயிலும் சீவிக்கும் மக்கள் அனைவரும் ஊதிய உயர்விற்காக குரல்கொடுத்து வருகின்றனர். எதிர்காலம் குறித்து எதனையும் தீர்மானம் செய்து கொள்ள முடியாமல் சகல சமூக வகுப்பினரிடையேயும் பெரும் அச்சமும் அதிருப்தியையும் வெளிப்படையாக துளிர்விட ஆரம்பித்துள்ளது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகவும்குரல்கள் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மறுபக்கம் பேச்சுக்களுக்கு இடமில்லை. யுத்தத்தை தொடர்வதுதான் ஒரேவழி என சிங்கள இனவாத சக்திகள் தீவிரமாக நிற்கின்றன. சிஹல உருமய நேரடியாகவும், மக்கள் விடுதலை முன்னணி மறைமுகமாகவும் இதற்காக பல செயற்திட்டங்களை தீவிரமாகச் செய்து கொண்டிருக்கின்றனர்.

அரசிற்குள்ளேயே யுத்தம் சார் குழுவொன்றும் "சமாதானம்" சார்பான குழுவொன்றுமாக சமகாலத்தில் செயற்படுகின்றன. மேல் நாடுகள் தமது கேடுகெட்ட நலன்களில் இருந்து தலையீடு ஒருபுறம். இந்திய அரசின் தேவைகள் நிவர்த்தி செய்யும் முகமாக, அதனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு, அரசாங்கம் சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கின்றது மறுபுறம். அனைத்து மக்களின் கழுத்துகளிலும் மெதுமெதுவாக சுருக்கை அரசு இறுக்கிக் கொண்டு வருகின்றது.

யுத்தத்தை வெல்ல இன்னும் குறுகிய காலப்பகுதியே உள்ளது எனவும், அதுவரை இடுப்பு நாடாவை இறுக்கிக் கொள்ளுங்கள் என்றும் உழைக்கும் மக்களிடம் கேட்டுவிட்டு சந்திரிகா உலக வலம் வந்து கொண்டிருகின்றார். அத்தோடு விருதிரி சவாரி என்ற பெயரில் இராணுவத்தின் சக்தியை தொடர்ந்தும் பலப்படுத்திக் கொண்டிருக்கிறார். இதற்கு ஏராளம் பணம் தண்ணீராக செலவிடப்பட்டு வருகின்றது. ஆக அவர்களுக்குள் இரகசியமான திட்டங்கள் பல உள்ளன என்பது தெளிவாகின்றது.



இனவாத சித்தாந்தப் பிடிக்குள் வைக்கப்பட்டிருக்கும் சிங்கள மக்கள் தம்மை ஒருகாலத்தில் டயரில் போட்டு எரித்த இராணுவத்திற்காக பன்சலயை வலம்வந்த கொண்டிருக்கின்றார்கள். இதே இராணுவம் நாளை அரசின் ஏவலாட்களாக தம்மீதே பாயும் என்பதை மறந்து கிடக்கின்றார்கள். நிலைமை மோசமானதாக காணப்படுகின்றது. எந்த பிரச்சினைக்கும் தீர்வு காணும் நோக்கம் அரசிற்கு அருகில் கூட இல்லை.

மீண்டும் யுத்தம் சித்திரை மாதம் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன. அரசாங்கம் நினைக்கின்றது யுத்தத்தினால் எப்படியாவது விடுதலைப் புலிகளை முறியடித்து அவர்கள் பலம் குன்றியிருப்பின் பேச்சு வார்த்தைக்கு வரப்பண்ணுவதற்கே. அதிகாரங்களை இழக்க விரும்பாதவர்கள் தமது வசதிப்படி கற்பனை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

தெற்கில் சில இனவாத சக்திகளை திருப்திப்படுத்த யுத்த வெற்றிகளையும் காட்டிக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் சென்றாலும், தமிழ் இனப்பிரச்சினையை தீர்விற்கு கொண்டு வர அரசிடம் எவ்வித நிரந்தர செயற்திட்டங்களும் கிடையவே கிடையாது. அப்போதும் கிடையாது. இப்போதும் கிடையாது. அரசின் நிலை தொடர்ந்தும் தமது ஆட்சியில் குந்தியிருக்க வேண்டும் என்பது மட்டுமே. தமிழ் இன விடுதலை கிளர்ச்சியை இப்போது அடக்கிய பின்பு, தெற்கில் சிங்கள வகுப்பினர் மூலம் அடுத்து வரவுள்ள கிளர்ச்சிகளை அடக்கி தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலை நாட்டிக் கொள்வதே. எதிரிகள் எப்போதும் திருந்தியதற்கு வரலாறு கிடையாது. நாம் எதிர்த்து இறுதிவரை தாக்குவதே ஒரே வழியாகும். தமிழ்தேசிய விடுதலை மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்துவிடுமா?

இப்படிப்பட்ட நிலைமையில் அனைத்து மக்களதும் எதிர்காலம் பற்றிய நோக்குடைய உண்மையான புரட்சியாளர்களுக்கு வரலாறு தற்போது தந்திருக்கும் பொறுப்பு சிறியதல்ல. மேல் நாடுகள் இப்பிரச்சினையில் தலையீடு செய்யும் ஆபத்தினை மக்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறுவது ஒருபுறம்: இந்திய பொருளாதார, அரசியல் தேவைகளின் அடிப்படையில் செய்யப்படும் தலையீடுகள் மறுபுறம். மற்றும் மக்களை அடக்கி ஒடுக்கும் அரசின் நிர்வாகவாகம் அடைந்து வரும் பாசிச பண்புகள். இவற்றை ஒழித்துக் கட்டுவதற்கான செயற்பாடுகள் என்பன அனைத்து சமூகங்களிலும் உள்ள புரட்சியாளர்களின் நிகழ்ச்சிநிரலில் முதல் அங்கமாக அமைய வேண்டும்.

தர்மகுமார

## முறியடிப்...(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதிக்க நலன்களில் இருந்து எமது போராட்டத்தைப் பயன்படுத்தி வந்ததையும், தொடர்ச்சியாகவே தலையீடுகள் செய்து வருவதையும் அனைவரும் அறிவோம். அவ்வாறே இன்று எல்லாவிதமான தேசிய அடக்குமுறைகளுக்கும், தடைகளுக்கும் எதிராக நின்று நிலைபெற்று வளர்ந்து வரும் நமது விடுதலைப் போராட்டம் குறித்தும் அதன் ஓர்மப் பண்புகள் குறித்தும் போராட்டத்தில் மக்களின் பங்கு மேலும் அதிகரித்து வருவது குறித்தும், அதன் அரசியல் இராணுவ தனித்துவம் குறித்தும், ஏகாதிபத்திய அரசுகள் அஞ்சத் தொடங்கிவிட்டன. இதன் காரணமாகவே, நமது விடுதலைப்போராட்டத்தின் பண்பினையும் அதன் திசையையும் தலைகீழாகப் புரட்டுவதற்கான வழிமுறைகளில் தெளிவாக கொள்கை வகுத்துக் கொண்டு செயற்படத் தொடங்கி விட்டன. சிறிலங்கா அரசினையும் அதன் ஆள்புலத்தையும் சிங்கள அரச யந்திரத்தையும் பாதுகாத்துக் கொடுப்பது என்ற நிலைப்பாட்டைத் தெளிவாகவே எடுத்துவிட்டன.

இவ்வாறான நிலைப்பாட்டில் நின்று கொண்டுதான், அவ்வரசுகள் நம்தேசத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன. அச்சுறுத்துகின்றன. ஆசை வார்த்தைகள் காட்டுகின்றன. நம் மக்கள் மத்தியிலும் பல்வேறு ஊசலாடும் பிரிவினர் மத்தியிலும் மனச்சஞ்சலங்களை ஏற்படுத்திடலாம் என படாதபாடு படுகின்றன. மெதுமெதுவாக அரசியல் பேச்சுவார்த்தை என்ற பொறிக்குள் நமது போராட்டத்தைச் இழுத்துச் சிக்க வைத்து, நீண்ட போராட்டப்பாதையினூடாக நமது தேசம் பெற்றுக் கொண்டுள்ள தனித்துவமான வலுவான தற்காப்பு ஆற்றலை இல்லாதொழிக்க முனைகின்றன. இதன் நிமித்தம் வல்லரசுகள் தாம் தேர்ச்சி பெற்றுள்ள (பேச்சு வார்த்தை அரசியலுக்குள்) தளத்திற்கு நம் தேசத்தை தந்திரமாக இழுத்துவிட முயல்கின்றன. இழுத்தடிப்புகளுக்கு உள்ளாக்கியும், இராஜதந்திர நாடகங்கள் மூலமாகவும் நமது விடுதலைப் போராட்டத்தை திசைவிலகச் செய்யவும் பலவீனப்படுத்தி விடவும் முயன்று வருகின்றன. இதற்கு முன்னோடியாக மறைமுகமான நேரடியான கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகள்மூலமாக நமது மக்கள் மீது உளவியல் தாக்குதலை ஆரம்பித்துள்ளன.

(தொடர்ச்சி 7ல்...)

www.tamilarangam.net

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## நம் தேசமெங்கும்..

வடிவத்திற்குச் செல்வோம். அரசியல் வகைப்பட்ட "போராட்ட" முன்னெடுப்பு தனக்கேயான விசேஷித்த பண்பைக் கொண்டிருப்பதுடன், சர்வதேச சக்திகள் அனைத்தினதும் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டு வெற்றிகளைக் குவித்துக்கொண்டு நகர்வதாயும் உள்ளது. இவ்வாறாக சர்வதேச அளவிலான ஆதிக்க சக்திகளுடன், அதுவும் ஏகாதிபத்தியங்களுடன் அடிப்படை விடயங்களில் விட்டுக் கொடுப்புகளுக்கு இடமின்றி, அரசியல் பேரம்பேசல்கள் செய்துகொண்டு அவர்களின் நெருக்குதல்கள், அழுத்தங்கள், அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டபடி போராட்டத்தை முன்னகர்த்த வேண்டியிருப்பது நமது தேசத்திற்கு புதிய அனுபவமுமாகும்.

தேசத்தின் விடுதலையில், சுயநிர்ணய உரிமையில்நமது மக்கள் அனைவரும்ஏகோபித்த வேட்கை கொண்டுள்ளனர் என்பதை சர்வதேச அரங்கில் வெளிப்படுத்துவது நமது தேசத்தின் இன்றைய அரசியல்நிலைப்பாட்டையும் போராட்டத்தையும் பலப்படுத்திடுவதாய் நிச்சயம் அமையும்.

தேசத்தின் அமைப்பு வடிவம் பெற்றுள்ள, அமைப்பாகும் முதிர்ச்சியைக் கொண்டுள்ள அனைத்து சமூக சக்திகளும் ஆசிரியர்கள், கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், பனைவளத் தொழிலாளர்கள், ஊடகவியலாளர்கள், அரச ஊழியர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள், வகுப்புத் தொழிலாளர்கள், வைத்தியர்கள், தாதிமார் மற்றும் மருத்துவதுறை ஊழியர்கள், கிராமிய உழைப்பாளர்கள், சிற்றூழியர்கள், வர்த்தகர்கள், சாரதிகள் ஆகிய அனைத்துப் பிரிவினரின் சங்கங்களும் பெண்கள் மற்றும் இளைஞர் அணிகளும் தேசசுயநிர்ணய உரிமை என்பதை தமது கைகளில் எடுத்திட வேண்டும்.

இப்படியாக இன்றைய கட்ட அரசியல் முன்னெடுப்புகள் மக்களின் போராட்ட பலத்தில் அரசியல் சாரமேற்றப்பட வேண்டும். மக்கள் போராட்டம் என்பது அதன் உண்மையான அர்த்தத்தில் தனது சக்தியை நிறுவிடுவதற்கான காலம் இதுவே. தமது அயாராப் போராட்டத்தின் மூலம் நமது மக்களால் தமிழீழத்தின் விடுதலை வரலாறு படைக்கப்படும்.

## அமெரிக்கருக்கு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவ இந்திரத்தை போசித்துப் பேணிவருகின்றார்கள். அணு ஆயுதங்களை கவசமாக அணிந்து கொண்டிருக்கும் இக் கோழைகள் விடுதலைக்காகப் போராடும் மக்களுக்கு எத்தனை ஆணவமாக அச்சுறுத்தல் விடுக்கிறார்கள்.

மக்கள் சமூகங்களின் அடிப்படை வாழ்வுரிமை, சுதந்திரம் என்பவற்றிற்கு என்றென்றும் எதிராக செயற்படும் இந்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள், அதற்காக எந்த மனிதகுல விரோத காரியத்தையும் செய்யத் தயங்குவதில்லை விடுதலைப் போராட்டங்களை பயங்கரவாதம் என முத்திரை குத்தி சிதைத்து விடுவதற்கான முன்தயாரிப்பாக "அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரானது" எனும் பிரச்சாரம் தற்பொழுது அமெரிக்காவினால் உலகளாவிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒருபகுதியாகவே வில்சின் கருத்தும் உள்ளது. எது பயங்கரவாதம்? யார் பயங்கரவாதிகள்? கியூபா, சிலி, கிரனடா, ஈராக், லிபியா... என அமெரிக்கப் பயங்கரவாதத்தின் சுவடுகள் படிந்திருப்பதை மனசாட்சியுள்ள மனிதகுலம் மறந்துவிடவில்லை. ஏன் விடுதலைப் புலிகள் மீது யுத்தம் தொடுக்கவில்லை என சிலர் தம்மிடம் அமெரிக்காவிடம்) கேட்கிறார்களாம். ஆம், நமது தேசத்திடம் தோற்றுப் போயுள்ள சிங்கள அரசுக்கும் அதன் கூட்டாளிகளுக்கும் வக்காளத்து வாங்கி, எம்மீது ஆக்கிரமிப்பு யுத்தம் செய்ய வேண்டும் எனும் நோக்கம் அமெரிக்காவுக்கு இருந்து வருவதை தமிழீழ மக்களான நாம் அறியாமலில்லை. அதற்கான முன்னுரைதான் "மற்றவர்கள் யுத்தம் தொடுக்க கோருகிறார்கள்" எனும் கூற்றாகும். நமது தேசம் ஆயுதத்தை கீழே போட வேண்டுமாம். நல்லதே, அவர்கள் முதலில் அணு ஆயுதங்கள் உட்பட அனைத்து ஆயுதங்களையும் களையட்டும். சிறிலங்கா அரசை யுத்தக் குற்றத்திற்காக உலக நீதிமன்றின் முன் நிறுத்தட்டும். அதன் பின்னர் நாமும் ஆயுதமற்ற உலகை உருவாக்குவதற்காக எம்மை அர்ப்பணித்துக் கொள்வோம். தேசங்களை ஆக்கிரமித்து, மக்கள் சமூகங்களை துவம்சம் செய்து, செயற்கையான பஞ்சங்களையும் பட்டினிச் சாவுகளையும் உருவாக்கி மனித இனத்தை அழித்திடும், யுத்தங்களை திட்டமிட்டு உருவாக்கி உலகையே நாசகாரப்படுத்திடும் அனைத்து ஆக்கிரமிப்பு சக்திகளுக்கும் தமிழீழ மக்களான நாம் உரத்துக் கூறுகிறோம்:

அந்நியச் சுவடுகளை நமது
தாய் மண்ணில் ஒருபோதும்
அனுமதியோம்!
ஆக்கிரமிப்பாளர்களே உங்கள்
கைகளில் ஆயுதங்கள்
உள்ளவரையில் எமது
கரங்களில் கருவிகள்
நிறையும்! தமிழீழம் எமது
பாரம்பரியத் தாயகம்!
நமக்கென ஒரு அரசினை நாம்
உருவாக்கியே தீருவோம்!

## முறியடிப்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

"புதிய உலக ஒழுங்கு" எனும் கவசத்தின் கீழ், ஆதிக்க உலக ஒழுங்கை நிறுவ பிரயத்தனம் செய்து கொண்டிருக்கும் ஏகாதிபத்திய சக்திகளின் சித்தாந்தங்களை, நமது சூழலில் சமாதானப் பேரவை எனக் கூறிக்கொண்டும், ரவாய மாற்றுக் கருத்துக்கள் எனக் கூறிக்கொண்டும், சிங்கள ஆதிக்க மனக்கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு சில சக்திகள் செயல்படுகின்றன. இவர்கள் தமிழ் மொழி ஊடகங்களுக்கூடாக விடுதலைப் போராட்டதிற்கு எதிராக கருத்துக்களை பரப்பிக் கொண்டிருக்கின்றனர். இன்று தேசிய விடுதலைப் போராட்டங்கள் சாராம்சத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களாக அமையும் புரட்சிகர பண்பை முனை மழுங்கச் செய்வதில் இச்சக்திகள் பிரக்ஞையுடன் ஈடுபடுகின்றன. இந்த வகையில் ஏகாதிபத்திய அடக்குமுறைக்கு துணை போகின்றன.

**ஆக நமது தேசிய விடுதலைப் போராட்டத்தினை ஆதிக்க அரசுகளின் கூட்டு தடைசெய்துள்ளதோடு,** சிங்கள அரசுடன் **கரங் கோர்த்துச் செயற்படுகின்றன என்பது தெளிவாகவே நிரூபிக்கப்பட்டுள்ளது.** இதற்கான பொறியாகவே அரசியல் பேச்சுவார்த்தைகள், விடுதலைப் புலிகளின் மீதான தடைகள் மற்றும் அழுத்தங்கள் என்றெல்லாம் ஆதிக்க அரசுகளின் வழிமுறைகள் வழமைபோல் விரிவடைந்து செல்கின்றது.

எனவே நம் தேசத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள அடிப்படையான, முதன்மையான தடையை தகர்ப்பதில் அனைத்துப்பிரிவினரும் ஒன்றிணைந்த இலக்குடன் செயற்படுவோம். நமது தேசியக் கோரிக்கைகளை பரந்தளவிலான மக்களின் பலத்தில் வளர்தெடுப்போம். அதற்கென நாம் பல்வேறு வழிமுறைகள், உபாயங்கள் பற்றிச் சிந்திப்போம். எமது தேசத்தின் ஆதார அரசியல் கோரிக்கைகளை உரத்து முழங்குவோம்.

அதேசமயத்தில், முழுமையின் ஒரு பகுதி என்றளவில், அரசியல் பேச்சுவார்த்தைகள் களத்தினையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதும், இதற்கான அனுபவங்களை பிற வரலாற்றிலிருந்தும் நமது சொந்த அனுபவங்களில் இருந்தும் கற்றுக் கொள்வதுடன், நமது மக்களின் உறுதியான அரசியலிலும், சொந்தபலத்திலும், சர்வதேச சமூகத்தின் பலத்திலும் நமது விடுதலைப் போராட்டத்தை ஊன்றுவோம். இதுவே நமது தேசத்தின் உண்மையான விடுதலைக்கான சரியான உறுதியான திசை வழியாகும்.

---

- ★ **தமிழீழப் பெண்களின் தேச உரிமைக்கான முழக்கத்தை சர்வதேசப் பெண்களின் உரிமைப் பிரகடனங்களுடன் ஒன்றிணைத் திடுவோம்.**
- ★ **நமது போராட்டத்தின் நியாயத் தன்மையை, அதில் பிணைந்துள்ள பெண்கள் நமது உரிமையை, நலன்களை உலகம் அங்கீகரிக்கச் செய்வோம்.**
- ★ **தமிழீப் பெண்களான நாம் ஓரணி திரண்டு சர்வதேச பெண்கள் தினமான இன்று பிரகடனப்படுத்துவோம்:**
- ★ **தேச சுயநிர்ணயத்திற்கான உரிமையும் பெண்ணுரிமையே!**
- ★ **ஈழத்தமிழர் சுயநிர்ணயம் ஈழத்தமிழ் பெண்களின் உரிமையே!!**

## மக்கள் களம்

அன்புடையீர்,

மிகவும் தரமான, அறிவார்த்தமான, பக்கச் சார்பற்ற பத்திரிகையாக தமிழீழம் பத்திரிகையை வெளிக் கொண்டுவரும் தங்களின் கடின உழைப்பிற்கும்முயற்சிகளுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். திறமையாக போர்செய்வதில் மாத்திரமல்ல, சக மக்கள் சமூகங்களை சமத்துவமாக மதித்திடும் மிகவும் உயர்ந்த மானுட நாகரீகத்தையுடைய தேசத்தினர் நாம் என்பதை உலகுக்கு வெளிப்படுத்துவோம்.நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்... நம் மக்கள் அனைவரையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவர கடினமாக உழைப்போம். இப்பெரும் பணியை நிறைவேற்றும் பொறுப்பை தங்களைப் போன்றவர்கள் கொண்டிருக்கிறீர்கள். ஒன்று படுவதற்கான நேரம் இதுவே. . . மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும் !

-ரமணன், வெப்தளம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN
3XX
United Kingdom

**மக்களது அரசியல் அதிகாரத்திற்கான போராட்டத்தில் தமிழீழ மக்கள் கட்சி!**

www.thamileelam.org
info@thamileelam.org

அன்பார்ந்த வாசகர்களே!

இந்த 24வது இதழுடன் தமிழீழம் பத்திரிகைக்கு 2வருடங்கள் பூர்த்தியாகிறது. இவ்வெற்றியை தங்களுடன் பரிமாறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இன்றைய போராட்ட கட்டத்தில், நமது தேசம் ஓரணியில் அரசியல் திரட்சி பெற்று,மக்களின் போராட்ட பலத்தில், மக்களின் தலைமைத்துவத்தில் தமிழீழ ஜனநாயகக்குடியரசை நிறுவிடுவதற்கு ஜனநாயகப்பண்பும், சா்வதேச உணா்வும், போர்க்குணாம்சமும், உயா்மானுட விழுமியங்களும்நிறைந்த போராட்ட பாதையில் பயணிப்பது அவசியமாகும். இத்தகைய பாதையில் தேசத்தை நெறிப்படுத்தி வழிநடாத்தி செல்வதற்கு தொடர்ச்சியான புரட்சிகர அரசியல் பிரச்சாரம் தேவைப்படுகிறது.

நமது மக்களின் நாளாந்த போராட்ட வாழ்விலிருந்தும், வரலாற்றிலிருந்தும் சர்வதேசப் போராட்டங்களின் அனுபவங்களிலிருந்தும் படிப்பினைகளை உள்வாங்கி கற்றுக் கொண்டு அப்படிப்பினைகளை மீள நமது மக்களுக்குக் கொண்டு செல்வதன் மூலமாக தேசிய மற்றும் சமூக அளவிலான புரட்சிகர அரசியல் சித்தாந்தத்தை நமது தேசத்தில் நிறுவிட தமிழீழம் பத்திரிகை வாயிலாக நாம் முயன்று வருகிறோம். நமது முயற்சியில் நாம் வெற்றியடைந்து வருவதை வாசகர்களான தங்களிடமிருந்து வரும் கடிதங்கள் மூலமாகவும், வாய் மூலமாகவும் இன்னும் பிறவழிகளிலும் கிடைக்கப் பெறும் கருத்துகள் நிரூபித்து வருகின்றன.

இத்தகைய வெற்றியானது, தமிழீழத்தில் இரகசியமாக செயற்படும் புரட்சிகர கட்சியொன்றிற்கு அத்தனை இலகுவாக கிடைக்கப்பெறக் கூடியதல்ல. பல்வேறு அழித்தொழிப்புகள், ஜனநாயக மறுப்புக்கள் மற்றும் மாற்றுக்கருத்துக்களின் பால் சகிப்புணர்வின்மைகள் போன்ற நெருக்கடிகளை அன்றாடம்எதிர்கொண்டவாறு நாம் செயற்பட்டு வருகிறோம்.

ஒரு தலைமறைவு கட்சிக்கு பத்திரிகையை உருவாக்குவது என்பதிலும் விட விநியோகிப்பதே சவாலாயுள்ளது. தமிழீழ தாயகத்திலும், சிறிலங்கா, தமிழகம் மற்றும் புலம்பெயர் நாடுகளெங்கும் கட்சிப் பணியில் ஈடுபட்டுவரும் நமது கட்சியின் தோழர்களதும் ஆதரவாளர்களதும் உழைப்பும் அர்ப்பணிப்பும் ஒவ்வொரு இதழிலும் பொதிந்துள்ளது. இப்பணிகளில் ஈடுபட்டு, ஒத்துழைப்பு நல்கிவரும் அனைவரதும் புரட்சிகர உணர்வை தங்களுடன் இணைந்து கௌரவிக்கக் கிடைத்த இச்சந்தர்ப்பத்திற்காக மகிழ்வடைகிறோம்.

எமது அரசியல் செயற்பாட்டில் எமக்கு தார்மீக உற்சாகப்படுத்தல்களை வழங்கியும், பரஸ்பரம் புரட்சிகர அரசியல் அறநெறிகளுக்கமைய விமர்சன சுயவிமர்சனங்களை பரிமாறிக்கொண்டும் எம்முடன் தோள் சேர்ந்து பயணித்துவரும் "தமிழீழ புதிய ஜனநாயகக் கட்சி"யையும் (தேசபக்தன்) இத்தருணத்தில் தோழமையுடன் நினைவு கூர்கிறோம்.

அனைத்துக்கும் மேலாக, அடக்குமுறை நிறைந்த சூழலில் இரகசியமாக தமிழீழம் பத்திரிகையை வாசித்து அபிப்பிராயங்கள் கூறியும், போட்டோ பிரதிகள் எடுத்து ஏனையவர்களுக்கு வழங்கி கருத்துகளை பரவச்செய்தும் வரும் வாசகர்களான தங்கள் பாத்திரம் தமிழீழம் பத்திரிகையின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் இலக்கு நோக்கிய பயணத்திற்கும் அடித்தளமாயுள்ளது என்பதையிட்டு பெருமிதமடைகிறோம்.

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடான **தமிழீழம்** கட்சியின் புரட்சிகர இலட்சியங்களை மேலும் காத்திரமிக்க வடிவில் மக்களுடன் பரிமாறிக்கொள்ளும் என உறுதியேற்கிறோம்.

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064

## ஓயாத கிளர்ச்சிக்கு தயாராவோம்!

அடுத்துவரும் காலங்கள் நமது தேசத்திற்கு அரசியல் வகையில் மிகவும் முக்கியத்துவ மிக்கதாகும். விடுதலை புலிகளை பிரித்தானியா தடை செய்வதற்கான நடவடிக்கைகளில்தீவிரமாக இறங்கியுள்ளது. அமெரிக்கா தனது முகவர்வில்ஸ்மூலமாக பாரம்பரிய தாயகம்எனும்கோரிக்கையையே கைவிடுமாறு எச்சரிக்கை விடுத்துள்ளது. சிங்கள அரசின் அழித்தொழிப்புகளையும் ஏகாதிபத்திய முகாமினதும் இந்திய பிராந்திய ஆதிக்க சக்தியினதும் நெருக்குதல்கள் அச்சுறுத்தல்களை எல்லாம் எதிர்கொண்டபடி நமது போராட்டத்தை முன்னகர்த்த வேண்டிய நிலையில் தேசமாக நாமுள்ளோம்.

நீண்ட போராட்டத்தினூடாக, தன்னைத் தற்காத்துக்கொள்ள நம் தேசம் பெற்றுக்கொண்டுள்ள பலத்தினை அரசியல் பேச்சுவார்த்தைகள் என்ற வலைக்குள்நமது தேசத்தை இழுத்துச்சிக்கவைத்து இறுதியில் தமது வழிக்குக் கொண்டு வர ஆதிக்க சக்திகள் கூட்டமைத்து செயற்படுகின்றன என்பதை யிட்டு நாம் மிகுந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

நமது தேசத்தின் அகரீதியான பலமே நமது தேச இருத்தலை பாதுகாத்திடும், நம்மை வாழவைத்திடும் ஒரே சக்தி. அவ்வகையில் நம் தேசத்தில் ஊற்றெடுத்திடும் அரசியல் உணர்வுகளை, உள்ளாற்றலை ஒருங்கிணைத்து மக்கள் போராட்டங்களாக, மக்கள் கிளர்ச்சிகளாக அரங்கிற்குக் கொண்டு வருவோம். நமது மக்களின் கூட்டுப் பலத்தினால் நமது விடுதலையை பலப்படுத்துவோம்.

பாலஸ்தீன மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்திபாதா மக்கள் போராட்டங்களினால் சியோனிச அரசும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் தடுமாற நேர்ந்துள்ளது. எழுச்சிபெற்ற மக்களின் முன்னால் ஏகாதிபத்தியம் காகிதப் புலியே எனும் தோழர் மாவோவின் வார்த்தைகளை பாலஸ்தீன மக்களது போராட்ட வரலாறு மீளவும் உலகுக்கு நிரூபிக்கிறது.

இத்தகைய மக்கள் போராட்ட பாதையில் நமது தேசத்தை முன்னகர்த்தும் காத்திரமான சக்தியாக பல்வேறு சமூக சக்திகளதும் எழுச்சிப் போராட்டங்கள் அமைந்துள்ளன. அரச படைகளதும் துரோகிகளினதும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தேசத்தின் பிரதிநிதிகளாக பொங்குதமிழ் எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுத்துவரும் நம் மாணவ சமூகத்திற்கும் மக்களுக்கும் நம்மனைவரினதும் வாழ்த்துகளையும் ஒருமைப்பாட்டையும் தெரிவித்துக் கொள்வதுடன், சுயநிர்ணய உரிமைக்கான மக்கள் போராட்டத்தில் தேசமாக அனைவரும் அணிதிரள்வோம். ஓயாத கிளர்ச்சிகளின் மூலம் நம் விடுதலைப் போராட்டத்திற்கு மக்கள் சாரமேற்றுவோம்.

மலையக தமிழ் தேசத்தில் தற்பொழுது வெடித்துக் கிளம்பியிருக்கும் எழுச்சிப் போராட்டங்கள் புதிய வரலாற்றுப் பாதையில் மலையகத்தை இட்டுச் செல்வதை கட்டியங் கூறுகின்றன. சிங்கள சோவினிசத்தினால் தேசிய அடக்குமுறைக்குள்ளாகும் மலையக தமிழரை வர்க்க ரீதியாக அடக்குவது சிங்கள அரசுக்கும் சிங்கள தரகு முதலாளி பிரிவினருக்கும் இலகுவானதா யிருப்பதால் ஈவிரக்கமற்ற உழைப்புச் சுரண்டலால் மலையகத் தொழிலாளரை நசுக்கி வருகின்றனர். இவையனைத்தையும் எதிர்த்து மலையகம் வீறுகொண் டெழுந்துள்ளது.

மலையக தமிழ் தேசத்தினால் மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கு நமது தேசத்தின் ஒத்துழைப்பையும் ஒருமைப்பாட்டையும் வழங்குவோம். போராடும் மலையகத்துடன் தோள் சேர்ந்து செயற்படுவோம்.

உலக பெண்கள் தினத்தையொட்டி நம் தேசத்தின் சுய நிர்ணய உரிமையையும் பெண்கள் உரிமையாக வளர்த்தெடுக்கவும் வென்றெடுக்கவும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்